(அ) கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்தின் கீழ் நடைபெறும் சிற்றணைகளில் (Barrages) 3 இடங்களில் நீர் ஒதுக்குச் சுவர்கள் (Coffer Dams) இடிந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; (அ) மற்றும் (ஆ) ஆம். கடந்த வெள்ளத்தின்போது கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்தின் கீழ்காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட மூன்று சிற்றணைகளின் தடுப்புச்சுவர்கள் சிறிது சேதமடைந்தன. சிற்றணைகள் இரண்டிலும், மூன்றிலும் சேதம் சரி செய்யப்பட்டு கட்டுமான வேலைகள் திரும்ப ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி அணையிலுள்ள பூங்காவை நவீனப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 747 திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருஷ்ணகிரி அணையில் உள்ள பூங்காவை சுற்றுலா பயணிகள் கவரும் வண்ணம் நவீனப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) கிருஷ்ணகிரி அணையில் சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு சுற்றுலாத்துறையின் மூலமாக விடுதி ஒன்று கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ), இல்லை (ஆ) இல்லை. ஆனால் கிருஷ்ணகிரிக்கு அருகில் பேரிகனப்பள்ளி கிராமத்திற்கருகில் சாலையோர தங்கும் விடுதியை (Motel) அமைக்கும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9.10)

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கிருஷ்ணகிரி அணையில் உள்ள பூங்காவைச் சுற்றுலாப் பயணிகள் கவரும் வண்ணம் நவீனப்படுத்தும் திட்டம் அரசுக்கு இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே சில இலட்சணக்கான ரூபாய் செலவில் மின்விளக்குகள் போடப்பட வேண்டுமென்று, அரசாங்கம் ஒப்புதல் அளித்து இருந்தது. ஆகவே இதனை மீண்டும் பரிசீலனை செய்து, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அந்தப் பூங்காவை நவீனப்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 14]

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டுகள் பொதுப்பணித் துறையினரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அங்கே எந்த விதமான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமானாலும் சீர்திருத்தப் பணிகள் செய்து அழகுபடுத்தும் பணிகள் பற்றி பொதுப்பணித் துறையினரிடத்திலே தான் கேட்கப்பட வேண்டும்.

மதுரை யானைக்கல் பாலம் அருகில் வைகையாற்றின் நடுவிலுள்ள மண்டபத்தைப் புதுப்பித்தல்

*வினா எண். 748 திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் யானைக்கல் பாலம் அருகில் வைகையாற்றின் நடுவில் இடிந்து கிடக்கும் மைய மண்டபத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மதுரை நகரில் யானைக்கல் பாலம் அருகில் வைகை ஆற்றின் நடுவில் உள்ள மைய மண்டபத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வைகை ஆற்றின் நடுவில் இருக்கக் கூடிய மைய மண்டபம் திருமலை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது. அதனுடைய பக்கச்சுவர்கள் இடிந்து, சரிந்துக் கிடக்கின்றன. திருவிழா காலங்களில் மக்கள் அங்கே கூடுகிறார்கள். மதுரை நகரில் இருக்கக்கூடிய மக்கள் மாலை நேரங்களில் அங்கே ஒய்விற்காக சென்று வருகிறார்கள். ஆற்றில் அமைந்திருக்கக்கூடிய அந்த மண்டபத்தில் அழகிய சிற்பங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்த மண்டபத்தினை பாதுகாக்கக் கூடிய முயற்சிகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டபம் யாரால், எப்போது கட்டப்பட்டது என்ற விவரங்கள் ஆவணங்களில் இல்லை என்று தெரிவிக்கிறார்கள். மேற்படி ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் மாசி உற்சவத்தில் பெரிய சுவாமி 10ஆம் நாள் மாசி மகத்தன்று இம் மண்டபத்தில் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி தீர்த்தம் கொடுப்பது வழக்கம். ஆனால் 1962 ஆம் ஆண்டிலிருந்து இம்மண்டபத்தில் எழுந்தருளுவது இல்லை. மேலும் குறிப்பிட்ட 10 ஆம் நாள் மண்டபகப்படி நகரத்தாரால் நடத்தப்பட்டு வந்தது, ஆனால் 1961 முதல் நகரத்தார்களும் நிறுத்தி விட்டனர். ஆகவே அது இப்போது புழக்கத்தில் இல்லாத காரணத்தாலே மேலும் செலவு செய்ய வேண்டாம் என்று தீர்மானித்து இருக்கிறார்கள்.